www.padippakam.com




23

# ஈழத்தவர் வரலாறு

## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....

-செங்கை ஆழியான்-

யாழ்ப்பாண அரசரினதும், சிங்களவரசரினதும் வலிமை குன்றிய காலங்களில் வன்னியர்கள் தத்தமது பிரதேசங்களைத் தாமே அரசாள நோக்கம் கொண்டார்கள். தம்பலகாமத்தில் தனியுண்ணாப் பூபாலவன்னியன் என்பான் கோணேச்சரக் கோயிலதிகாரத்தைக் கவர்ந்து அவ்விடத்திற்குத் தன்னை அதிகாரியாக்கிக் கொண்டான். பனங்காமம், குமாரபுரம், ஓமந்தை முதலானவிடத்து வன்னியர்களும் இவ்வாறு நடந்து




கொண்டனர்.''

கி.பி.1215 ஆம் ஆண்டு கலிங்கமாகன் என்ற மன்னன் இலங்கையைக் கைப்பற்றிப் பொலநறுவையிலிருந்து ஆட்சி செலுத்தினான். இவனது படையெடுப்பு உத்தரதேசத்திலும் இராசரட்டைப் பிரதேசத்திலுமுள்ள மக்களை இடம் பெயர வைத்தன. இப்பிரதேசங்களில் வாழ்ந்த சிங்கள மக்கள் தென்பலம் பெயர்ந்தனர். 'காலனின் பூதங்கள் போன்ற அந்தத் தமிழ்ப் பூதங்கள் இப்படியே இந்த இராச்சியத்தையும் சமயத்தையும் அழித்தனர்' என மகாவம்சம் புலம்பும். கலிங்கத்து மாகனின் படையெடுப்பால் நீர்ப்பாசனக் குளங்கள் அழிந்தன. உரிய காலத்தில் உரிய பராமரிப்பின்மையால் அவை அழிவுற்றன. நீர்த்தேக்கங்கள், குளங்கள் முதலான நீர்ப்பாசன வசதிகளோடு வளமான வயல் நிலங்களையும் கொண்டிருந்த வன்னிப்பிரதேசம் போசித்த செறினான குடித்தொகை அவ்விடத்தைக் கைவிட்டு இடம் பெயர்ந்த மக்களின் நகர்வோடு அருகியது. பருவகாற்று மழையின் பொய்த்தலும் வெள்ளப் பெருக்கும் காட்டு நோய்களின் பரவலும் பல்வேறு அரசியற் காரணிகளும் மக்களை இடம் பெயர வைத்தன.

தக்க பராமரிப்பு இன்றிக் குளங்கள் பாழடைந்தன. அணைகள் முறிப்புற்றன. அயனமண்டலக்காடு விரைந்து வளர்ந்து அவற்றை மூடிக்கொண்டது. வன்னிப் பிரதேசத்தின் பண்டைக் குடியிருப்புக்கள் பலவும் பல்வேறு காரணங்களால் மக்களால் கைவிடப்பட்டுக் காடுகளால் மூடப்பட்டன. தென்னிந்தியப் படையெடுப்புக்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டில் அடிக்கடி நிகழ்ந்தன. தென்னிலங்கையைக் கைப்பற்ற விரும்பிய படைவீரர்கள் வடவிலங்கையிலேயே பாசறை அமைத்துக் கொண்டனர். அதேவேளை தென்னிலங்கைப் படைகளும் இப்பிரதேசத்தினூடாகவே வடவிலங்கையைத் தாக்க முயன்றன.

இவை காரணமாக யாழ்ப்பாண அரசுக்கும் தென்னிலங்கை அரசுக்கும் இடையில் நிலைமாறு வலயமாக அமைந்த வன்னிப்பிரதேசம் யுத்தகளமாக அடிக்கடி மாற நேர்ந்தது. இவ்வாறு அடிக்கடி நிகழ்ந்த போர்கள், மலேரியா போன்ற கொள்ளை நோய்கள், கடும் வறட்சி, வெள்ளப்பெருக்கு இவை காரணமாக ஏற்பட்ட பஞ்சம் பசி என்பன யாவும் இந்தப் புராதன குளக்குடியிருப்புக்களைக் கைவிட்டு மக்கள் வெளியேறக் காரணமாயின. இப்பிரதேசத்தில் பரவலாகக் குடியேறி வாழ்ந்த மக்கள் நான்கு திக்குகளிலும் குடிபெயர்ந்தனர். முக்கியமாக முல்லைத்தீவுக் கரையோரம், பூநகரிக்கரையோரம் என்பனவற்றிற்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் குடி பெயர்ந்தனர். வன்னியரசின் மூக்கிய மையங்களான பெருங்காலி, முசலி, செட்டிகுளம், கிழக்குமூலை, மேல்பற்று, பனங்காமம், துணுக்காய்,உடையாவூர், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, கரிக்கட்டு மூலை, மாகவன்னி, திருகோணமலை முதலான பகுதிகளில் மக்கள் எஞ்சினர். பருவமழை பொய்க்கும்போதும் காலந்தப்பிப் பொழியும்போதும் அதிகமாகப் பொழிந்து வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தும்போதும் இப்பிரதேசங்களில் நெற்செய்கை சிரமமானதாக அமைந்தது. இப்பிரதேசங்களில் பாழடைந்த குளங்களும் நீர்க்குன்றுகளும் பள்ளங்களும் சதுப்பு நிலங்களும் நீரைத்தேக்கி நுளம்புகளை உற்பவித்தன. அவை கொடிய மலேரியா நோயைத் தோற்றுவித்து மக்களைத் தொடர்ந்து இப்பிரதேசங்களில் வாழவிடவில்லை. மேலும் அடர்காடுகள் யானைகளின் உறைவிடமாகி இடையறாது தொல்லைகள் ஏற்ப்பட்டன. கோடை வறட்சி இப்பிரதேசங்களில் கொடூரமாக இருந்தது. குடிப்பதற்கே நன்னீர் கிடையாது போனது. இத்தகுநிலைகள் வன்னிப்பிரதேசத்தில் அதிக செறிவான குடியிருப்புக்களை உருவாக்கவிடவில்லை.

### வன்னி அரசர்கள்

வையாபாடலில் வையாபுரி ஐயர் வன்னித் தலைவர்கள் / அரசர்கள் பற்றி ஒழுங்குமுறையான பெயர்களைப் பதிந்து சென்றுள்ளார். ஆனால் நம்பகத்தன்மையான வன்னித்தலைவர்களின் குறிப்புக்கள் போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய வரலாற்றுக் குறிப்புக்களிலிருந்து பெறக்கூடியதாகவுள்ளது. எனினும் இலங்கை வரலாற்றில் வன்னியர்களுக்கு எதிராக யாழ்ப்பாண மன்னர் சில காலத்தும் சிங்கள மன்னர் சில காலத்தும் நடவடிக்கைகள் எடுத்துள்ளனர்.

கி.பி. 1302 இல் யாழ்ப்பாண அரசனாக வரோதய சிங்கை ஆரியன் இருந்தபோது வன்னிய அதிகாரிகள் சிலர் கலகம் விளைவித்து மன்னனுக்கு எதிராகச் சிங்களவரசனின் உதவியை வேண்டியுள்ளார்கள். சிங்கள மன்னன் உதவவில்லை. கி.பி. 1347 ஆம் ஆண்டு குணபூஷணன் செகராசசேகரன் என்ற பட்டத்துடன் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாக இருந்தபோது வன்னிப் பிரதானிகள் சிங்களப் பிரசைகளைத் தூண்டி அவர்கள் உதவியுடன் கலகம் விளைவித்தார்கள். அரசன் தன் படையுடன் சென்று கலகத்தையடக்கி வன்னியருக்குதவிய சிங்களவரையும் தண்டித்து மீண்டான். அரசனுக்கு இக்கலகத்தையடக்க உதவிய ஓமந்தையின் சிறு பிரதானியை வன்னிப் பிரதேசத்தின் சிற்றரசனாக்கி, ஏனைய வன்னியர்களை அவனுக்குட்பட்டு ஆள வழி செய்தான்.

ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி வருமாறு தனது வளர்ப்புப் புத்திரன் சப்புமல் குமரயாவை அனுப்பியபோது, அவன் முதற்கட்டமாக வன்னியர்களை அடக்கி வன்னிச் சிற்றரசுகளைத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துள்ளான்.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் தீவுகளையும் கோயிற் பற்றுகளாகப் பிரித்தனர். வன்னி நாட்டில் பூநகரி, பல்லவராயன் கட்டு, பெருங்காளி, மாந்தை, நானாட்டான், அரிப்பு என ஆறு கோயிற் பற்றுக்கள் இருந்தன. எனினும் வன்னிநாடு பெருங்களிப்பற்று, பனங்காமம், கருநாவற்பற்று, முள்ளியவளை, தென்னமரவாடியென ஐந்து வன்னிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒவ்வோர் வன்னியனாட்சிக்கு உட்பட்டு இருந்தது.

பறங்கியர் அரசாட்சிக்குட்பட்ட தேசத்தில் வன்னிநாடு இருந்தாலும், வன்னியர் ஒரு காலத்திலும் அவ்வரசாட்சிக்கு கீழ்ப்பட்டிருந்தாரல்லர். அவர்கள் பலமுறையும் கடற்கரைப்பட்டினங்களிலும் யாழ்ப்பாணக் கிராமங்களிலும் நுழைந்து கொள்ளையடித்துச் சூறையாடிப் போவர். ஆகையினால் அவர்கள் ஆனையிறவில் பைல் எனும் கோட்டையையும் வெற்றிலைக்கேணியில் பெஸ்குற்றர் எனும் கோட்டையையும் கட்டினர். போர்த்துக்கேயர் காலத்தில் வன்னியர்கள் வரியாக 42 கொம்பில்லாத யானைகளையும் 125 தீராந்திகளையும் செலுத்தி வந்தார்கள். ஒல்லாந்தர் வன்னியரிடமிருந்து அதே வரியைத் திறையாகப் பெற்றார்கள். அதிகமாக அவ்வரியை அறவிட நேரில் வன்னியர்கள் கண்டியரசனுடன் சேர்ந்து கொள்வார்களென்ற பயமும் இருந்தது. ஆனால், பனங்காமத்து கைலாய வன்னியன் ஒரு கட்டுப்பாட்டுக்கும் உடன்பட்டானில்லை. அதனால் ஒல்லாந்தர் மற்ற வன்னித்தலைவர்கள் அவனோடு பகைக்குமாறு சில சூழ்ச்சிகள் செய்துள்ளனர். ஒல்லாந்த தேசாபதி முன் கைலாய வன்னியன் பன்னிரண்டாண்டுகளாக சமூகம் தர மறுத்துள்ளான். அவனோடு பகைக்க விரும்பாத ஒல்லாந்தர் அவன் இறந்ததும் அவனது மகன் காசியனாரை வன்னிமையாக்கி திறை பெற்றனர்.

(தொடரும்)